

சிவகங்கை தாலுகா ஒ.அண்ணாநகரில் நடைபெற்ற சிவகங்கை மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் – மு.செ.கணேசன் மகன் எழில்மாறன் மணமகள் செ.பரிமளா ஆகியோர் திருமணத்தினை முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். மணவிழாவில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் மற்றும் மணமக்கள் குடும்பத்தினர் உள்ளார்கள்.

### 45 நிமிடம் பேசிய ஆதவ் அர்ஜுனாவால்

# 4 நிமிடம் கூட த.வெ.க. ஆட்சியின் சாதனையைச் சொல்லி வாக்கு கேட்க முடியவில்லை!

## ஆள் இல்லாத கடைக்கு டீ ஆத்தும் ஆதவ் – இ.பரந்தாமன் பதிலடி!



**சென்னை, செப்.23-**

**தேர்தல் பிரச்சாரத்தில் 45 நிமிடம் பேசிய ஆதவ் அர்ஜுனாவால், 4 நிமிடம் கூட த.வெ.க. ஆட்சியின் சாதனையை பற்றி சொல்லி வாக்கு கேட்க முடியவில்லை என்று இ.பரந்தாமன் கூறினார்.**

**மதுராந்தகம் தி.மு.க. வேட்பாளர் ஐ.பரந்தாமன் காலை நிருபர்களிடம் கூறியதாவது:-**

த.வெ.க. கட்சியை சேர்ந்த ஆதவ் அர்ஜுனா, மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதிக்கு அந்த கட்சியினுடைய தேர்தல் பொறுப்பாளராக இருந்து பணியாற்றுவதற்காக அந்த கட்சி நிர்வாகிகள் மத்தியிலே ஒரு நீண்டதொரு உரையாற்றி இருக்கிறார். 45 நிமிடம் அவர் உரையாற் றினார் என்பதை விட, 45 நிமிடம் வாந்தி எடுத்தார் என்று தான் நான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால், ஆட் சிக்கு வந்து நான்கு மாதம் ஆகிறது. 44 நிமிடங்களில் நான்கு நிமிடம் கூட தன்னுடைய ஆட்சி சாதனையைச் சொல்லி ஓட்டு கேட்கறதுக்கு வக்கு இல்லை. 44 நிமிடமும் திமுகவையும், திமுக தலைவரையும், எதிர்கட்சித் தலைவரையும், திமுக சார்பாக வந்து இங்கே தேர்தல் பணி ஆற்றியிருக்கக்கூடிய முன்னாள் அமைச்சர்களைப் பற்றி தான் ஒப்பாரி வச்சிருக்கிறாரே தவிர, அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தங்களுடைய சொந்த செல்வாக்கையோ, தங்களுடைய ஆட்சி திட்டங்களைப் பற்றி விளக்கி சொல்வதற்கோ எதுவுமே இல்லை.

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்று சொல்வார்கள். அந்த மாதிரிதான் காலி பாத்திரம் டப டப டப டன்னு சத்தம் போட்டுட்டு நேற்று மதுராந்தகத்தில் இருந்து போயிருக்கிறது. அவர் கேட்கிறார், உதயநிதி ஸ்டாலின் கலைஞரின் பேரனாதான் இருக்காரு, அவர் என்ன கீழே இருந்து கஷ்டப்பட்டு வந்தாரான்னு கேட்கிறாரு.

கலைஞரின் பேரன் என்று சொல்வதில் நாங்கள் பெருமைப் படுகிறோம். அவர் கலைஞரின் பேரன் இல்லாம வேற யாரு பேரன்? அவருக்கு ஒரு வரலாறு இருக்கிறது, ஒரு அடையாளம் இருக்கிறது. ஆதவ் அர்ஜுனாவுக்கு என்ன அட்ரஸ் இருக்கிறது? ஆதவ் அர்ஜுனானா த.வெ.க. வில், ஆதிகாலத்தில இருந்து கஷ்டப்பட்டு அந்த கட்சிக்கு வந்தாரா? தவெகவில இருக்கக்கூடிய ரசிகர்கள் எல்லாம் போஸ்டர் ஒட்டி, அந்த ரசிகர் மன்றத்தில நற்பணிகளை செஞ்சாங்கன்னு சொன்னாங்களே, அந்த மாதிரி வந்தாரா?

எத்தனை கட்சி மாறியவர், எடப்பாடி பழனிசாமி சொன்ன மாதிரி கட்சிக்கு அங்கங்க குத்தகை எடுத்துட்டு வராரு. அவரெல்லாம் உதயநிதி ஸ்டாலினைப் பற்றி பேசுவதற்கு கொஞ்சமும் அருகதை இல்லை. “ஊரான் நெய்யில் ஸ்வீட் செய்யாதீங்க சிஎம் சார்” என்று முதல்வர் விஜய் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசினார். நான் கேட்கிறேன், இந்த மதுராந்தகம் தொகுதியினுடைய தவெக வேட்பாளர் யார் சார்? ஊரான் வீட்டு நெய் சார். உங்க கட்சியில் யாருமே வேட்பாளர் இல்லையா? அ.தி.மு.க.வில் இருந்து நீங்க பொட்டி கொடுத்து தூக்கிட்டு வந்து வச்சு இன்றைக்கு வேட்பாளரா போட்டு இருக்கீங்களே?.

உங்க கட்சிக்காரங்க எல்லாம் இன்னைக்கு மனவருத்தத்தில இருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவு தூரம் போஸ்டர் ஒட்டுனோம், நாங்க எவ்வளவு தூரம் கொடி கட்டினோம், நாங்க எவ்வளவு தூரம் பாலாபிஷேகம் பண்ணினோம், ஆனால் எங்களுக் கெல்லாம் சீட் கொடுக்கவில்லை.

ஊரான் வீட்டு நெய்யில ஸ்வீட் செய்றாரு எங்க தலைவர்ன்னு உங்க கட் சியைப் பார்த்து கேள்வி கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல, ரொம்ப அருமையான ஜோக் ஒன்று சொன்னார். இங்க அக்கா சொன்னாங்களாம், ‘மதுராந்தகத்தில் தண்ணீர் பிரச்சனை இருக்கிறது. அதை தீர்க்கறது நம்ம நீர் வளத்துறை அமைச்சரே வந்து விட்டார், தண்ணீரும் வந்துவிடும்’ என்று அந்த அமைச்சரை காட்டி சொன்னாராம்.

நீர்வளத்துறை அமைச்சர் வந்தா நீர் வந்துருமா? நீங்க நான்கு மாத்தில் ஜூன் மாசம் 12ம் தேதி அன்று மேட்டூர் அணையை திறக்கிறதுக்கே உங்களால் முடியவில்லை. நீங்க மதுராந்தகத்துல எப்படி தண்ணிய கொண்டு வந்து சேர்க்க போறீங்க? அதுமட்டுமல்ல டாஸ்மாக்கில் ஊழல் செஞ்சிருக்காங்க, பாட்டிலுக்கு 20 ரூபா வாங்கிட்டு இருக்கீங்கன்னு உங்கள் அமைச்சரே சொல்றாரு, ஊழலைப் பற்றி நீங்கள் பேசலாமா?

அதைவிட கொடுமை என்னவென்றால், ஓட்டுக்கு பணம் கொடுக்கிறார்கள் என்று சொல்லி திமுககாரங்களை பற்றி பொய் பிரச்சாரம் செய்ய வருகிறார். இதை சொல்வதற்கு ஆதவ் அர்ஜுனாவுக்கு எங்கயாவது துளியும் தார் மீக உரிமை உள்ளதா? ஒரு எம்எல்ஏவை கோடிக்கணக்கில பணம் கொடுத்து விலைக்கு வாங்கிய நீங்கள் எல்லாம் திமுகவினரை பார்த்து பர்சேஸ் பண்ண வருகிறார்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு என்ன சார் ரைட் இருக்கு? அதிமுகவில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட எம்எல்ஏவை விலைக்கு வாங்கினீர்கள்.

அதைவிட வெட்கம் என்ன? “ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அது தாண்டா வளர்ச்சி” என்று பட்டுக்கோட்டை சொல்லியிருக்கிறார். ஆளுதான் வளர்ந்திருக்கார், அறிவு வளர்ந்திருக்கா இல்லையா என்று நான் சொல்ல தேவையில்லை, மதுராந்தகத்தில் உள்ள மக்களும் சரி, தமிழ்நாட்டு மக்களும் சரி, உங்களுடைய நடவடிக்கையைப் பார்த்து தெரிந்து கொள்வார்கள்.

அதனால் தான் சொல்றேன், தயவு செய்து தேர்தல் பணி ஆற்ற வந்த தவெக்கட்சிக்காரர்கள், அமைச்சர்கள் எல்லாம் உங்கள் சாதனையைச் சொல்லி ஓட்டு கேளுங்கள். திமுகவை திட்டுவதில் ஒரு பிரயோஜனமும் கிடையாது.’உதயநிதி எல்லாம் ஒரு பெரிய ஆளே இல்லை? ‘நாங்க கைது பண்ணல், கைது பண்ற அளவுக்கு அவர் பெரிய ஆளு கிடையாது’ என்று சொல்லி இருக்கிறீர்கள்.

கைது செய்த போது, உதயநிதி ஸ்டாலினிடம் கையெழுத்து வாங்கும் போது அருகில் நான் தான் இருந்தேன் உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் கேட்ட போது, “நாங்கள் அவரை கைது பண்ணவில்லை என்று சொல்லி பின்னங்கால் பிடறியில் பட ஓடி என்று நீதிமன்றத்தில் சொன்ன வாசகம் பதிவாகியுள்ளது. இதை எல்லாம் நீங்கள் தெரிந்து பேச வேண்டும்.

ஏதோ மதுராந்தகத்தில் வந்து உட்கார்ந்து கிட்டு பொய்யா பேசினா உங்களுக்கு ஓட்டு போட்டுருவோம்னு நினைக்காதீங்க. இந்த 4 மாத ஆட்சி மக்களுக்கு மிகப்பெரிய ஒரு வேதனையைக் கொடுத்துள்ளது. கரண்ட் பில் அதிகமாக வருகிறது, கரண்ட் அடிக்கடி கட் ஆகிறது. ஏரி வேலை செய்தவர்களுக்கு இன்னும் கூலி கொடுக்க வில்லை.

நான் செல்கிற இடமெல்லாம் மக்கள் சொல்கிறார்கள், சர்க்கரை விலை ஏறியதால் டீ கடையில் போய் டீ, காபி வாங்கி குடிக்க முடியவில்லை. அந்த அள வுக்கு விலை ஏறிவிட்டது. கரண்ட்ட தொட்டா தான் ஷாக் அடிக்கும், ஆனால் கரண்ட் பில்லை பார்த் தாலே ஷாக் அடிக்கிறது. உங்கள் ஆட்சியின் லட்ச ணம் இது தான். நாவடக் கம் தேவை, தேர்தல் பணிகளை மட்டும் பாருங்கள். தேவையில்லாமல் சீண்டினால் தெரு தெருவாக நான் உங்களை பற்றி பேச வேண்டி வரும். 75 ஆண்டு கால கட்சியை பேக்பண்ணி விட்டதாக ஆதவ் பேசியுள்ளார். மதுராந்தகத்தில் தவெகவுக்கு வேட்பாளர் இல்லையே. ஏன் அதிமுக வேட்பாளர் பர்சேஸ் பண்ணினார்கள்.

75 ஆண்டு காலம் கட்சியில் அக்மார்க் தொண்டனுக்கு சீட் கொடுக்கிறார் கள், தவெகவுக்கு ஆளே இல்லை, அதனால் தான் ஆன் இல்லாத கடைக்கு டீ ஆத்துறாகு ஆதவ். என்னுடைய வெற்றி தமிழ்நாட்டில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும். இவ்வாறு அவர் கூறினார்.

---

### முதல் வகுப்பு வினாத்தாள் லீக் விவகாரம்!

# த.வெ.க. அரசின் வினோதப் போக்கிற்குக் கண்டனம்!

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!



*சென்னை, செப். 23-*

*தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:*

*பள்ளிக்கல்வித்துறையின் செயல்பாடுகள் வினோதமாகவும், கல்வி வளர்ச்சிப் பாதையில் இருந்து தடம் மாறியும் செல்கிறது.*

*முதல் வகுப்பு ஆங்கில வினாத்தாள் லீக் ஆன விவகாரத்தில் கல்வித்துறை காட்டும் அதிவேக நடவடிக்கை ஆச்சரியம் அளிக்கிறது. ஆனால் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கைகளில் எந்த வேகமும் இல்லை.*

*ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) பிரச்சினைக்கு தீர்வு இல்லை.*

*பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வில்லை.*

*வகுப்பறைகளில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது.*

*தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக பதவி உயர்வு வழங்கப்படாமல் பணி நிறைவு பெறும் அவலம் தொடர்கிறது.*

*இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு களையப்படவில்லை.*

*அறிஞர் அண்ணா காலத்தில் இருந்து வழங்கப்பட்ட ஊக்க ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.*

*தேர்தல் வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் இல்லை.*

*நிர்வாக சீர்கேடுகளும், நீதிமன்ற வழக்குகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.*

*இவற்றில் எல்லாம் வேகம் காட்டாத கல்வித்துறை, முதல் வகுப்பு வினாத்தாள் விவகாரத்தில் மட்டும் ‘ஒரே நாடு, ஒரே வினாத்தாள், ஒரே தேர்வு’ என்ற ரீதியில் செயல்படுவது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*மாநிலம் முழுவதும் பொதுத்தேர்வு வினாத்தாள் தயாரிப்புக் குழு யார்? அதை அச்சடித்தது யார்? வெளியிட்டது யார்? என்பது குறித்து வெளிப்படைத்தன்மை வேண்டும்.*

*முதல் வகுப்பு குழந்தைகளுக்கு பள்ளி அளவில் நடத்த வேண்டிய தேர்வை, மாநில அளவில் பொதுத்தேர்வாக நடத்துவது ஏற்புடையதல்ல. .*

*வினாத்தாள் லீக் ஆனதற்கு ஆசிரியர்களை பதற்றத்திற்கு உள்ளாக்கி, உடனடியாக அலுவலகம் வந்து வினாத்தாளை பெற்றுச் செல்ல வேண்டும் என உத்தரவிடுவது கண்டிக்கத்தக்கது.*

*மாணவர்கள் மகிழ்ச்சியாக கற்றதை வெளிப்படுத்தும் வகையில் தேர்வு முறை இருக்க வேண்டுமே தவிர, அச்சுறுத்தும் வகையில் இருக்கக்கூடாது. வருங்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் தொடக்கக்கல்வித் துறையில் நடைபெறாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் சார்பில் வலியுறுத்துகிறேன்.*

*இவ்வாறு அதில் கூறியுள்ளார்.*

---

### சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

## செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

### (21.09.2026)



Chennai Vannara pet youngster murder.

சென்னையில் பழைய வண்ணாரப்பேட்டையில் இளைஞர் கழுத்தறுத்து கொலை.

Ariyalur murder - families protest collector office closed

அரியலூரில் கொலை சம்பவத்தை கண்டித்து மக்கள் போராட்டம் நடத்த வந்ததால் ஆட்சியர் அலுவலக வாயில் கதவை மூட உத்தரவு.

Thoothukudi - TVK person brother sexual harrasment to girl

தூத்துக்குடி – பெண்ணுக்கு பாலியல் தொல்லை அளித்த த.வெ.க. நிர்வாகியின் சகோதரர் தட்டிக் கேட்ட பெண்ணின் குடும்பத்தினர் மீது கொலை முயற்சி தாக்குதல்.

Salem - ganja boothai kolai mirattal

சேலம் மாநகராட்சி குறிஞ்சி நகர் பகுதியில் கஞ்சா போதையில் அரிவாளுடன் பொதுமக்கள், பெண்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த இளைஞர்கள்.



Perambalur - govt bus driver attacked by TVK

பெரம்பலூர் – அரசு பேருந்து ஓட்டுநர் மீது மதுபோதையில் தாக்குதல் நடத்திய த.வெ.க நிர்வாகிகள்.

Vanagaram - misbehave to girl one arrest

வானகரம் பகுதியில் அதிகாலை வீட்டின் வெளியே வந்த பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற நபர் கைது.

Vpm – vinayagar silai oorvalam issue - attack video viral

விநாயகர் சிலை ஊர்வலத்தின் போது ஏற்பட்ட தகராறில் காவல்துறை முன்னிலையிலேயே பட்டியல் சமூகத்தை சேர்ந்த இருவர் தாக்கப்பட்ட சம்பவம்.

Tjr - girl harrasment college student arrest

பதினோராம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த கல்லூரி மாணவன் கைது.

others:

Kovai - 1 rupee idlie old lady cylinder issue

ஏழைகளுக்கு ரூ.1 இட்லி வழங்கும் மூதாட்டியையும் ஏமாற்றிய அரசு கோவை ஒரு ரூபாய் இட்லி பாட்டிக்கு வழங்கப்பட்டு வந்த இலவச சமையல் எரிவாயு சிலிண்டர் திடீர் என ரத்து செய்யப்பட்டதால் அதிர்ச்சி.

Chengalpet - nepal tamils relatives protest

நேபாளம் சென்றவர் மாயம்.. நடவடிக்கை எடுக்காத அரசுக்கு கண்டனம் சாலையோரம் அமர்ந்து ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய உறவினர்கள்.



Tharapuram - TVK candidate police protection

தாராபுரம் தொகுதி த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவிற்கு பிரச்சாரத்திற்கு செல்லும் இடங்களில் மக்கள் எதிர்ப்பு போலீசார் பாதுகாப்புடன் பிரச்சாரம் செய்யும் த.வெ.க. வேட்பாளர்.

TVL – murder attempt

திருவள்ளூர். பொன்னேரி அரசு மருத்துவமனையில் பணியாற்றி வரும் தற்காலிக ஊழியர் ராஜேஸ்வரி என்பவர் மீது மருத்துவமனை வளாகத்தில் பெட்ரோல் ஊற்றி தீ வைப்பு. 50% தீக்காயங்களுடன் ஆபத்தான முறையில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பு. பொன்னேரி காவல்துறை விசாரணை.